**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# புறநானூற்றில் மறப்பண்புகள்

**ச. சண்முகப்பிரியா**
உதவிப்பேராசிரியர், மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம்
கோயம்புத்தூர் – 641021.

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க கால மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவனவாக சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் அடங்கிய தொகுப்பே சங்க இலக்கியங்கள் ஆகும். அதனை அகம், புறம் எனப்பிரித்து தமிழின் மேன்மையை எடுத்துரைக்கின்றனர். இவற்றுள் புறம் என்பதைப் பெயரிலேயே கொண்ட புறநானூறு பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள வரலாற்று களஞ்சியமாக விளங்குகின்றது. பல்வேறு நிலைகளில் அரசர்களும் அவர்களின் படைகளும் எதிர்கொண்ட போரினையும்,வீரத்தையும் பறைசாற்றும் நூலாக விளங்குகின்றது. அவ்வகையில் புறநானூற்றில் மறப்பண்புகள் என்னும் தலைப்பில் இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.*

## Abstract

The Sangam literature serves as a reflection of the lives of the people during the San—gam period. The books Ettuthokai and Pattupattu are considered Sangam literature. These works are categorized into Aham (inner life) and Puram (outer life), highlighting the greatness of Tamil culture. Among these, Puram itself refers to the Purananuru, which stands as a historical repository containing various historical accounts. It showcases the struggles, wars, and valor of kings and their armies in different contexts. In this way, Purananuru serves as a work reflecting these themes under the title “Marappanbukal” (Forgetting Virtues). This is the context of the essay being presented.

**திறவுச்சொற்கள்**

*புறநானூறு, புறம், மறம், மறவர், படைச்செருக்கு.*

**சங்க இலக்கியம்**

*சங்க இலக்கியம் என்பது சங்கம் வைத்து தமிழை வளர்த்த காலத்தைச்சேர்ந்த நூல் தொகுப்பாகும். இறையனார் அகப்பொருள் உரை என்ற நூலில் முச்சங்கங்கள் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் நக்கீரரால் எழுதப்பட்ட உரை கி.பி.எட்டாம் நூற்றாண்டில் ஏட்டில் எழுதப்பட்டது.தலைச்சங்கம் கபாடபுரத்திலும், இடைச்சங்கம் தென்மதுரையிலும், கடைச்சங்கம் தற்போது உள்ள மதுரையிலும் இருந்ததாகக் கூறுவர். கடைச்சங்க காலத்தில் 49 பாண்டிய மன்னர்களும் ஐந்து புலவர்களும் இருந்துள்ளனர். அச்சங்கத்தில் பாடப்பட்ட நூல்கள் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து கலித்தொகை, பரிபாடல் போன்றவை*

ஆகும்.(தமிழ் இலக்கிய வரலாறு ப.92.93)

கி.பி.3, 4, நூற்றாண்டுகளில் தொகுப்பு பணிகள் நடந்து இருக்க வேண்டும். சங்கப் பாடல்கள் தோன்றிய காலம் வேறு, தொகுக்கப்பட்ட காலம் வேறு என்று தமிழ் இலக்கியவரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கிய நூல்கள் பதினெட்டு ஆகும். இதனை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு எனப் பிரித்துள்ள னர். எட்டுத்தொகையைப் பழைய உரையா சிரியர்கள் தொகை என்றும், எண் பெருந் தொகை என்றும் குறிப்பிட்டு ள்ளனர். பாட்டு என்பது பத்துப்பாட்டாகும். இந்தப் பாட்டும் தொகையும் மிகப் பழமையானதாகும். இவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களே பதினெண்மேற்கணக்கு என பெயர் பெற்றன. கணக்கு என்பது பாட்டு என்றும், மேற் கணக்கு என்பது மிகுந்த அடி எண்ணிக்கை கொண்ட பாட்டு என்றும் பொருள்படும்.

“எட்டுத்தொகையில் ஒவ்வொன்றும் பல உதிரிப் பாடல்களின் தொகுப்பு எனலாம்.” என்று தமிழண்ணல் தமது தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்தப்பதிற்றுபத்துஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம்**

**என இத்திறத்த எட்டுத்தொகை.”**

என்ற தனிப்பாடல் மூலம் எட்டுத்தொகை நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பதை அறியலாம்.

## பொருள் வகைப்பாடுகள்

குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு என ஐந்தும் அவைகளில் கூறப்பட்டக் கருத்துக்களின் அடிப்படையில் அகம் சார்ந்த நூல்கள் எனவும் புறநானூறு, பதிற்றுப்பத்து இரண்டும் புறம் சார்ந்த நூல்கள் எனவும் பரிபாடல் அகமும், புறமும் சார்ந்ததாகவும் பிரித்துள்ளனர்.

இவற்றுள் புறநானூறு 400 பாடல்களைக் கொண்டுள்ள நூலாகும். இதற்கு கடவுள் வாழ்த்து பாடலை பாரதம் பாடிய பெருந் தேவனார் பாடியுள்ளார். புறநானூற்றை 156 புலவர்கள் பாடியுள்ளனர். இப்பாடல்கள் ஆசிரியப்பாவிலும் சில அடிகள் வஞ்சிப்பா விலும் அமைந்துள்ளன. புறம் என்ற சொல்லுக்கு வெளியிடம், அந்நியம், புறத்திணை, வீரம், பக்கம், முதுகு, பின்புறம், இடம் போன்ற பல பொருட்கள் உள்ளது. இங்குப் புறத்திணை புற ஒழுக்கம் என்ற நிலையில் அமைகிறது.

புறம், புறப்பாட்டு, புறம்புநானூறு என்றும் புறப்பொருள் பற்றிய செய்தியை கூறுவதால் இது புறநானூறு என வழங்கப்படுகிறது. புறநானூறு பண்டைத் தமிழகத்தின் வரலாற்றுக் களஞ்சியமாகும். மூவேந்தர்கள் கடையெழு வள்ளல்கள், குறுநில மன்னர் களின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் சிறந்த நூலாகும். இந்நூலில் தமிழகத்தின் கோநகரங்கள், துறைமுகங்கள், மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள் பற்றியச் செய்திகளும் மன்னர்கள் புலவர்களை போற்றியத் தன்மையும், அவர்களின் அறிவுரைகளை ஏற்ற தன்மையும், எடுத்தியம்பப்படுகிறது, போர் திறன், குடிமைப்பண்பு, ஈகை, ஒப்புரவு முதலான வற்றையும் இந்நூல் மொழிக்கின்றது.

## மறம்—சொல் விளக்கம்

மறம் என்ற சொல்லின் உச்சரிப்பே வலிமை வலியுறுத்துகிறது. மறம் என்ற சொல்லானது வீரம்,தீரம், சினம், சீற்றம், வலிமை, ஆற்றல், வெற்றி, அமர், அழித்தல், கொல்லல் என பத்து பண்புகளை உணர்த்துகிறது. மேலும் வீரம் என்ற பண்பிற்கு இலக்கியங்களில் 'மறம்' என்ற சொல்லையே பயன்படுத்தி உள்ளனர். மறத்தை உடையவன் மறவன் எனப்பட்டான். எனவே போர் வீரர்களை மறவர் என குறிப்பிடுவதை இதன் மூலம் அறியலாம்.

**“மலைந்து எழுந்தோர் மறம் சாயத்**

**தலைக்கொண்ட நிரை பெயர்ந்தன்று”**

(புறப்.பொ.வெ. பா.எண்-22)

என்ற அடிகளில் மறம் என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்துள்ளது புறப்பொருள் வெண்பாமாலை.

**“மறமானம்மாண்டவழிச்செலவு தேற்றம்**

*என நான்கே ஏமம் படைக்கு" (குறள்-766)*

என திருக்குறளும் எடுத்தியம்புகிறது.

சிறந்த படை என்பது மரத்தை முதன்மை யாகக் கொண்டு விளங்க வேண்டும் என்பதையும் அறியலாம் எனவே மறம் என்ற சொல்லாட்சி ஆனது சங்க காலத்திற்கு முன்னரே திருக்குறளில் பயன்படுத்தப் பட்டதை அறியலாம்.

*"மறம் கந்தாக நல் அமர் வீழ்ந்த*

*நீள்கழல் மறவர் செல்வுழி செல்க!"*

(புறம். பா.எண்.93)

என புறநானூறு மறத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றது.

சங்க இலக்கியங்கள் வீரத்தையே பெரும் பான்மையாகக் கருதுகோளாக் கொண்டு ள்ளது.

## புறநானூற்றும் மன்னர்களின் மறப் பண்புகள்

மன்னர்கள் நாட்டை ஆள்வது மட்டுமின்றி போர நிகழும் காலகட்டத்திலும் மக்களை காத்திடல் வேண்டும். தன் நாட்டு மக்களை வரிவிதித்து வருத்திடாமலும், வறுமை ஏற்படாமலும் அவர்களை குழந்தை போல காத்திட வேண்டும். அறம் பிறழாமல் தன் நாட்டையும், குடிகளையும் பேணுதல் மன்னர்களின் கடமையாகும். மூவேந்தர்கள், கடையெழு வள்ளல்கள், குறுநில மன்னர்கள் என பல மன்னர்களையும் அவர்களின் பீடு களையும் தமிழ் இலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம். தொல்காப்பியம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களை வண்புகழ் மூவர் என்னும் அடைமொழியுடன் எடுத்தியம்பு கின்றது.

புறநானூற்றில் மறவனின் பீடு, ஈகை, கலைத் தன்மை என்று அனைத்து சிறப்புகளையும் எடுத்துக் கூறுகின்றது.

*"படை குடி கூழ் அமைச்சு நட்புஅரண்*

*உடையான் அரசருள் ஏறு" (குறள்-381)*

என்ற திருக்குறள் அடிகளின் தன்மைகளை புறநானூற்று பாடல்கள் தெளிவாக விளக்கு கின்றன.

*"களிறு கடைஇயதாள்*

*கழல் உரீஇய திருந்து அடி,*

*கணை பொருது கவி வண் கையால்*

*கண் ஒளிர்வரூஉம் கவின் சபாத்து*

*மாமறுத்த மலர் மார்பின்"*

(புறம்.பா.எண்-7)

என்றஅடிகளில் கரிக்காற் பெருவளத்தானின் படைத்தன்மையும், வீரத்தன்மையும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று,

*"சென்று பட்ட விழுக்கலனும்*

*பெறல் கூடும், இவன் நெஞ்சு உறப்பெறின் எனவும்*

*ஏந்து கொடி இறைப் புரிசை, வீங்கு சிறை, வியல் அருப்பம், இழந்து*

*பைகுதும், இனிநாம்-இவன்*

*உடன்றுநோக்கினன் பெரிது எனவும்,*

*வேற்று அரசு பணி தொடங்கு நின்*

*ஆற்றலோடு புகழ்ஏத்தி." (புறம்.பா.எண்-17)*

என்ற அடிகளில் தலையாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையும் அவனது வீரச் சிறப்பினையும் அறிய முடிகிறது எனவே மன்னர்களின் வீரப் பண்பு பெரிதும் சிறப்புடையதாக இருந்துள் ளதை அறியலாம்.

## படைச்செருக்கு

தமிழர் போரில் பல வகையானப் படை களைப் பயன்படுத்தி உள்ளனர் அவற்றுள் நான்கு படைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

காலாட்படை அல்லது ஆட்படை

குதிரைப்படை அல்லது பரிப்படை

யானை படை அல்லது கறிப்படை

தேர்ப்படை ஆகியவாகும்.

*"உடலுநர் உட்க வீங்கி, கடல் என*

*வான் நீர்க்குஊக்கும் தானை"*

(புறம்.பா.எண்-17)

கடல் என நினைத்து வான்நீர் சொட்டும் அளவிற்கு பெரும்படை என போற்றுகின்றது புறநானூறு.வில்லேர் மறவர்களாக வீரமிக்கப் படை வீரர்கள் இருந்துள்ளனர் என்பதை சொல்லேர்ப்புலவர் புகழுடன் எடுத்துரைக்

கும் தன்மையினைப் பல்வேறு சங்க பாடல்களில் காணலாம்.

வீரமிக்க படைவீரன் ஒருவனே பெரும் தேர்க்காலுக்கு ஒப்பான மறவன் எனப் போற்றுகின்றது புறநானூறு இதனை,

**"களம் புகழ் ஓம்புமின் தெவ்விர்! போர் தெரிந்து**

**எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்**

**எண் தேர் செய்யும் தச்சன்**

**திங்கள் வலித்த கால் அன்னோனே"**

(புறம்.பா.எண்-88)

படைவீரனானவன் ஒரு மாதம் கூடிச் செய்த தேர்க்காலுக்கு ஒப்பானவன் என்று சிறப்புடன் எடுத்துரைக்கப்படுவதை அறிய முடிகின்றது. இத்தகைய வீரப் பண்பு கொண்ட படை வீரர்களை மன்னர்கள் தன்னகத்தை கொண்டு போர்புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## விழுப்புண்கள்

விழுப்புண் என்பது போரில் ஈடுபடும் மறவனின் வீரத்தை உணர்த்துவதாக அக் காலத்தில் இருந்துள்ளது. போரில் ஈடுபடும் வீரன் விழுப்புண் பெற்றவனாக இருக்க வேண்டும் அதுவே அவனுக்கு பெருமையாக விளங்கியது. செங்கண்ணான் என்னும் மன்னன் தன்னுடலில் 76 விழிப்புண்களை பெற்று வீரமிக்கவனாக விளங்கினான். தமிழர்கள் போர் செயலுக்கான அடையாளமாக விழுப்புண் இருப்பதை போற்றினர். விழுப்புண் என்பதே மறவனின் மாண்பு. சங்க இலக்கியத்தில் புறத்தை பற்றி கூறும் இலக்கியங்கள் விழுப்புண் சிறப்பைப் பெரிதும் போற்றுகின்றது.

புறத்திற்கு இலக்கணம் வகுத்த புறப்பொருள் வெண்பா மாலை,

**"வெங்குருதி மல்க விழுப்புண் உருதொறூஉம்**

**இங்குலிகம் சோரும் வரையேய்க்கும்—பைங்கண்**

**இனம்போக்கி நின்றார் இகல்வாட்டி வேந்தன்**

**மனம்போல் வந்த மகன்"**

(புறம்.வெ.மாலை-26)

என்று கூறுகின்றது.

**"வரி ஞிமிரு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து**

**அண்ணல் யானை அடுகளத்து ஒழிய**

**அருஞ்சமம் ததைய நூறிநீ,**

**பெருந்தகை! விழுப்புண் பட்டமாறே"**

(புறம்.பா.எண்-93)

என்று மன்னன் ஒருவன் போற்றப்பட்ட செய்தியினைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

## முடிவுரை

புறநானூறு சங்க இலக்கியத்தினுள் சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்ற ஒரு நூலாகும். மன்னர்கள் மறத்தையும் போற்றி மாண்புடன்ஆட்சி நடத்திய திறத்தையும் புறநாநூற்றின்வழி அறியலாம். வீரமே முதன்மையானதாகக் கூறப்படும் தன்மையைச் சங்க கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை காண முடிகின்றது. தன் உயிரை பொருட்படுத்தாது வீரத்தையே முதன்மையாகக் கொண்டு அக்கால மக்கள் வாழ்ந்த முறையை அறியலாம். படைகளின் தன்மையும் அவர்களின் வீரபண்பும் அதிக அளவில் புறநானூற்றில் போற்றப்பட்டுள்ளது.

மக்களை காத்திட மன்னர்கள் அரணாக விளங்கிய தன்மையை அறியலாம். மன்னர்கள் தங்கள் படைகளைக் கொண்டு பகைவர்களை வீழ்த்திய தன்மையையும், தன்னாட்டை பகைவர் நுழையா வண்ணம் அரணாக அமைந்த தன்மையையும் அதிக அளவில் புறநானூற்றுப் பாடல்கள் மொழிகின்றன.

## துணைநூற்பட்டியல்

1. பரிமணம் அ.மா. பாலசுப்பிரமணியம்,கு. வெ–புறநானூறு(மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், முதற்பதிப்பு - 2004
2. சாமி. சிதம்பரனார் -திருக்குறள் கண்ணப்பன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2006.
3. தமிழண்ணல்-தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி பதிப்பகம் ஆறாம்பதிப்பு-2010
4. ஐயனாரிதனார்- புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ் இணையப் பல்கலைக் கழகம்.